# PGP Educational Institutions
# NEWS updates
# Volley ball ground inauguration
# Dhinaboomi

தினபூமி, சேலம்
ஜூலை 19, 2026
thinaboomi.com

## நாமக்கல் பிஜிபி கல்வி நிறுவனங்களில் நவீன விளையாட்டு அரங்கு திறப்பு விழா



**நாமக்கல் ஜூலை 19-**

நாமக்கல்லில் அமைந்துள்ள பிஜிபி கல்வி நிறுவன வளாகத்தில் 200 ஏக்கர் பரப்பளவிலான நவீன விளையாட்டு வசதிகள் பிஜிபி கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி தலைமையில் பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு புதிய விளையாட்டு வசதிகளை பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர். இவ்விழாவில் துணைத் தலைவர் விசாலாட்சி பெரியசாமி தலைமை அதிகாரி பி.ஆர்.சம்பத் (ஐஏஎஸ் ஓய்வு) தாளாளர் எம்.கணபதி ஐஎப்எஸ் ஓய்வு கல்வி நிறுவனங்களுக்கான டீன் முனைவர் கே.பெரியசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். புதிய விளையாட்டு வளாகத்தில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட வலை வேலியுடன் அமைக்கப்பட்ட கைப்பந்து மைதானம் இரவு நேர பயிற்சிக்கான ஒளிவிளக்கு வசதி கிரிக்கெட் நெட் பயிற்சி மையம் மற்றும் இரண்டு வாலிபால் மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதிகள் மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டிலும் சிறந்து விளங்குவதற்கு பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். மேலும் திறமையை மேம்படுத்தவும் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் உதவும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் பழனி ஜி.பெரியசாமி பிஜிபி கல்வி வளாகம் ஒரு அமெரிக்க பல்கலைக்கழக வளாகத்தின் தரத்தில் கல்வி மற்றும் விளையாட்டு வசதிகள் ஒருங்கிணைந்த சூழலில் உருவாக்கப்பட்டதாக தெரிவித்தார். மாணவர்களின் உடல் ஆரோக்கியம் ஒழுக்கம் தலைமைத்துவம் மற்றும் குழு உணர்வை வளர்க்க விளையாட்டு முக்கிய பங்கு வைக்கிறது என்றும் அவர் வலியுறுத்தினார். இதில் கல்வி நிறுவனங்களின் அனைத்து கல்லூரிகளின் முதல்வர்கள் பேராசிரியர்கள் பணியாளர்கள் பயிற்சியாளர்கள் நிர்வாகிகள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# Malaimalar



நாமக்கல் பி.ஜி.பி. கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன விளையாட்டு மைதான வசதிகளை பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி ஜி.பெரியசாமி மற்றும் துணை தலைவர் விசாலாட்சி பெரியசாமி ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்ட போது எடுத்த படம். அருகில் கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் கைப்பந்து விளையாட்டு மாணவிகள் உள்ளனர்.

### நாமக்கல் பி.ஜி.பி. கல்வி நிறுவன வளாகத்தில்

## நவீன விளையாட்டு மைதானம் திறப்பு

பரமத்தி வேலூர், ஜூலை.18—

நாமக்கல் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் நவீன விளையாட்டு மைதானம் வசதிகள் திறப்பு விழா நடைபெற்றது.

நாமக்கல்லில் 200 ஏக்கர் பரப்பளவிலான நாமக்கல் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் வளாகத்தில் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை முன்னிறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய நவீன விளையாட்டு மைதானம் திறப்பு விழா நடைபெற்றது.

திறப்பு விழாவிற்கு பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி. ஜி.பெரியசாமி தலைமை வகித்து புதிய நவீன விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்தார். கல்வி நிறுவனங்களின் துணை தலைவர் விசாலாட்சி பெரியசாமி, தலைமை அதிகாரி சம்பத், ஐ.ஏ.எஸ். (ஓய்வு), தாளாளர் கணபதி, கல்வி நிறுவனங்களுக்கான டீன் பெரியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புதிய விளையாட்டு மைதான வளாகத்தில் வலை வேலியுடன் அமைக்கப்பட்ட கைபந்து, கபாடி மைதானம் மற்றும் இரவு நேர பயிற்சிக்கான ஒளிவிளக்கு வசதி, கிரிக்கெட் நெட் பயிற்சி மையம், மற்றும் 2 வாலிபால் மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகள் மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டிலும் சிறந்து விளங்குவதற்கு பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும்.

இந்தநிகழ்ச்சியில் பேசிய டாக்டர் பழனி ஜி. பெரியசாமி, பி.ஜி.பி. வளாகம் ஒரு அமெரிக்க பல்கலைக்கழக வளாகத்தின் தரத்தில் கல்வி மற்றும் விளையாட்டு வசதிகள் ஒருங்கிணைந்த சூழலில் உருவாக்கப்பட்டதாக தெரிவித்தார். மாணவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் குழு உணர்வை வளர்க்க விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் அனைத்து கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள், அலுவலகபணியாளர்கள் மற்றும் மாணவ—மாணவிகள் கலந்து கொண்டனர்.

**Dhinamani**

# பிஜிபி கல்லூரியில் ரூ. 2 கோடியில் 'நவீன விளையாட்டு மையம்' திறப்பு



பிஜிபி கல்லூரி வளாகத்தில் நவீன விளையாட்டு பயிற்சி மையத்தை திறந்துவைத்த அக்கல்லூரி தலைவர் பழனி ஜி. பெரியசாமி.

**பரமத்தி வேலூர், ஜூலை 17:** நாமக்கல் அருகே அமைந்துள்ள பிஜிபி கல்வி நிறுவன வளாகத்தில் ரூ. 2 கோடியில் நவீன விளையாட்டு மையம் வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது.

இவ்விழாவில், பிஜிபி கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி ஜி. பெரியசாமி தலைமை வகித்தார். அவர் புதிய விளையாட்டு மையத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்துவைத்தார்.

விழாவில், விசாலாட்சி பெரியசாமி, பி.ஆர்.சம்பத், முதன்மை ஒருங்கிணைப்பாளர் கே. பெரியசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

புதிய விளையாட்டு வளாகத்தில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்ட வலை வேயப்பட்ட கைப்பந்து மைதானம், இரவு நேர பயிற்சிக்கான ஒளி விளக்குகளுடன் கூடிய வசதி, கிரிக்கெட் நெட் பயிற்சி மையம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வசதிகள் மாணவர்களின் திறமையை மேம்படுத்தவும், சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் உதவும் என பிஜிபி கல்லூரியின் தலைவர் பழனி ஜி. பெரியசாமி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பிஜிபி கல்வி நிறுவனங்களின் தாளாளர் கணபதி, கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், பயிற்சியாளர்கள், நிர்வாகிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# Dhinathandhi

மக்கள், சிறுவர்கள் ஆர்வத்துடன் தேங் காய் சுடும் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினர்.

பட உள்ளது. அறிமுகப்படுத்தப்

**தொழில் நகரம் காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் பட்டுத் தொழி



பி.ஜி.பி. கல்லூரியில்

## நவீன வசதிகளுடன் புதிய விளையாட்டு வளாகம் திறப்பு

பரமத்திவேலூர், ஜூலை.18- பரமத்தி அருகே உள்ள பி. ஜி.பி. கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன விளையாட்டு வளாகம் திறப்பு விழா நேற்று நடை பெற்றது. விழாவில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலை வர் டாக்டர் பழனி ஜி.பெரிய சாமி கலந்து கொண்டு புதிய விளையாட்டு வளாகத்தை

இதில் துணைத்தலைவர் விசாலாட்சி பெரியசாமி, தலைமை அதிகாரி சம்பத், தாளாளர் கணபதி, கல்வி நிறுவனங்களுக்கான முதல் வர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய விளையாட்டு வளாகத்தில் வலை வேலியுடன் அமைக் கப்பட்ட கைப்பந்து, கபடி மைதானம் மற்றும் இரவு நேர பயிற்சிக்கு ஒளிவிளக்கு வசதி, கிரிக்கெட் வலை பயிற்சி மையம் மற்றும் இரண்டு கைப் பந்து மைதானங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

விழாவில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் அனைத்து கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள், பணியாளர் கள் மற்றும் மாணவர்கள் திர ளாகக் கலந்து கொண்டனர்.

நாமகிரிப்பேட்டையில்

# Kalaikathir



ஐயப்பன்

பல்வேறு அமைப்பி னரும் வாழ்த்தினர்.

அப்போது, "தனக்கு கொடுத்த இந்த வாய்ப்பை நேர்மையான முறையில் பணி யாற்றி, அனைவரும் பாராட்டும் வகையில் செயல்படுவேன்," என உறுதி கூறினார்.

நரிக்குறவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை, ஜாதிச்சான்றிதழ், ஆதார் அட்டை, ரேஷன்கார்டு இல்லாத பழங்குடி

மக்கள் பயன் இ நாடு,

# பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களில் நவீன விளையாட்டு வசதி திறப்பு

**நாமக்கல், ஜூலை 18**

நாமக்கல் பி.ஜி.பி., கல்லூரி வளாகத்தில், நவீன விளையாட்டு வசதிகள் திறப்பு விழா நடந்தது. பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் தலைவர் பழனி ஜி பெரியசாமி, புதிய விளையாட்டு வசதிகளை திறந்து வைத்தார். துணை தலைவர் விசாலாட்சி பெரியசாமி, தலைமை அதிகாரி சம்பத், ஓய்வு ஐ.ஏ.எஸ்., தாளாளர் கணபதி, ஓய்வு ஐ.எப்.எஸ்., கல்வி நிறுவனங்களுக்கான டீன் பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய விளையாட்டு வளாகத்தில், வலை வேலியுடன் அமைக்கப்பட்ட கைப்பந்து, கபடி மைதானம் மற்றும் இரவு நேர பயிற்சிக்கான ஒளிவிளக்கு வசதி, கிரிக்கெட் நெட் பயிற்சி மையம், மற்றும் இரண்டு வாலிபால் மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வசதிகள் மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டிலும் சிறந்து விளங்குவதற்கு பெரிதும் உதவக்கூடியதாக இருக்கும். விழாவில், பழனி ஜி பெரியசாமி பேசுகையில், "பி.ஜி.பி., வளாகம், ஒரு அமெரிக்க பல்கலை வளாக தரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் உடல், ஆரோக்கியம், ஒழுக்கம், தலைமைத்துவம், குழு உணர்வை வளர்க்க விளையாட்டு முக்கிய பங்கு வகிக்கிறது," என்றார்.

பி.ஜி.பி., கல்வி நிறுவனங்களின் அனைத்து கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.



■ நாமக்கல் பி.ஜி.பி., கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன விளையாட்டு வசதிகளை, கல்வி நிறுவனங்களின் தலைவர் பழனி ஜி பெரியசாமி, துணைத்தலைவர் விசாலாட்சி பெரியசாமி ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.